සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Civics

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 6	குடியியற்கல்வி

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **1 – 5 வரையான வினாக்களுக்கான விடைகளை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிந்து இடைவெளியில் எழுதுக.**

01. பாடசாலையின் …….. வெளிப்படுத்தும் முக்கியமான இலட்சினையாக பாடசாலை கீதத்தினை குறிப்பிடலாம்.
(நேசத்தை, கௌரவத்தை, தனித்துவத்தை)

02. சவால்களை வெற்றி கொள்ள …….. என்ற பண்பினை வளர்த்தக் கொள்ள வேண்டும்.
(தன்னம்பிக்கை, இரக்கம், மதிப்பளித்தல்)

03. சமூகத்தால் தொன்று தொட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டவிதிகளுக்கேற்ப செயற்படுவது …….. எனப்படும்.
(சடங்கு சம்பிரதாயங்கள், கட்டுப்பாடு, பொறுமை)

04. இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் வகைகள் …….. ஆகும்.
(5, 6, 3)

05. ஒருவரது வாழ்க்கை தரவுப் புத்தகத்தில் …….. ப்பற்றிய தரவுகள் காணப்படும்.
(அவரை, அதிபரை, மக்களை)

- **இலக்கம் 6 முதல் 10 வரையான கூற்றுக்களில் சரியாயின் (√) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்புக்குள இடுக.**

06. பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் உங்களது பெயரை சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளலாம். (…….)

07. பாடசாலையின் ஆசிரிய, மாணவ எண்ணிக்கைக்கு ஏற்ப பாடசாலை ஒழுங்கமைப்பின் கட்டமைப்பு வேறுபடும். (…….)

08. பொறுமை இல்லாமல் செயற்படுவது நற்பிரசை ஒருவரின் பண்பாகும். (…….)

09. தேசிய கீதம் இசைக்கும் போது இலகு முறையில் நின்று பாடுதல் வேண்டும். (…….)

10. பொதுச் சொத்துக்களை பேணி பாதுகாப்பது பிரசைகளின் கடமையன்று. (…….)

Past Papers Wiki

- **இலக்கம் 11 முதல் 15 வரையான வினாக்களில் மிகவும் சரியான விடையினை தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. பிள்ளை நேயப்பாடசாலை ஒன்றில் காணப்படும் பண்புகளில் ஒன்று.
    1. மக்கள் ஒத்துழைப்பு குறைவாக இருத்தல்.
    2. நீர் மற்றும் சுகாதார வசதிகள் பற்றாக்குறை இருத்தல்.
    3. பாதுகாப்பான கற்றல் சூழல் இருத்தல்.
    4. பாடசாலையினுள் சுமூகமான உறவுகள் காணப்படாமை.

12. சமய வழிபாட்டுத் தலங்கள் மூலம் ஆற்றப்படும் சேவை.
    1. சமய அறிவை வழங்குதல்
    2. தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
    3. சுகாதார சேவையை நடத்துதல்
    4. வருமான வரியை சேகரித்தல்.

13. திட்டமிடுவதாலும், ஒழுங்கமைப்பதாலும் கிடைக்கும் நன்மை.
    1. நேரம் வீணாகும்
    2. வளங்கள் பயன்படாது போகும்.
    3. ஊழியர்கள் நெருக்கீடுக்கு ஆளாகுவர்
    4. மனதில் பதற்றம் குறையும்.

14. பிரதேச செயலாளர் காரியாலயத்தினால் வழங்கப்படும் சேவை.
    1. அனுமதிப்பத்திரம் வழங்குதல்
    2. பாதை விளக்குகள் பராமரித்தல்.
    3. பாதைகள் துப்பரவு செய்தல்
    4. குப்பை, கூழங்களை அகற்றுதல்.

15. மாநகர சபையில் பிரதானியை அழைப்பது.
    1. முதலமைச்சர்
    2. பிரதமர்
    3. செயலாளர்
    4. நகரபிதா/ மேயர்

- **இலக்கம் 16 முதல் 20 வரையான வினாக்களுக்கு கீழ்வரும் படத்தினை வைத்து விடையளிக்குக.**



A



B

16. A படத்தில் காட்டப்பட்டுள்ள நபர் ..... ஆவார்.

17. A படத்தில் காணப்படுபவர் ஆரம்ப வயது முதல் பல்கலைக்கழக மாணவர் வரைக்கும் கற்பதற்கு ..... அறிமுகப்படுத்தினார்.

18. A படத்தில் உள்ளவர் ..... தந்தை என போற்றப்படுகின்றார்.

19. B படத்தில் காணப்படுபவர் ..... ஆவார்.

20. அவர் ..... நிலையங்களை நிர்மாணித்தார்.

(2x20 = 40 புள்ளிகள்)

பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவுடன் இன்னும் 4 வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக 5 வினாக்களுக்கு விடையளிக்குக.**
- **முதலாம் வினாவுக்கு 16 புள்ளிகளும், ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகளும் வழங்கப்படும்.**

01. i. பாடசாலையின் வரலாற்றினை அறிந்துகொள்ளக் கூடிய மனித மற்றும் பௌதீக வளங்கள் 2 இனை கூறுக.

1. ..... 2. .....

ii. உங்களது பாடசாலை அமைந்துள்ள வலயம் மற்றும் கோட்டம் ஆகியவற்றை முறையாக எழுதுக.

1. ..... 2. .....

iii. உங்களிடம் காணப்படும் பலவீனங்கள் 2 தருக?

1. ..... 2. .....

iv. பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம் பெறும் குழுக்கள் 2 குறிப்பிடுக.

1. ..... 2. .....

v. தனிநபர் தேவைகளுக்காக நிலத்தினை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 2 கூறுக.

1. ..... 2. .....

vi. மனித வளத்தை முறையாக பயிற்றுவிப்பதால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.

1. ..... 2. .....

vii. சமூகத்தில் ஒற்றுமையாகக் செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் 2 தருக.


1. ..... 2. .....

viii. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் சங்கங்கள் 2 தருக.

1. ..... 2. .....


(16 புள்ளிகள்)

02. i. கீழே காட்டப்பட்டுள்ள பாடசாலை ஒழுங்கமைப்பு கட்டமைப்பில் A, B, C என்ற இடங்களை பூரணப்படுத்துக.



(3 புள்ளிகள்)

ii. கீழே காட்டப்பட்டுள்ள கட்டத்தில் பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையிலான பல்வேறு தொடர்புகள் காணப்படுகின்றன. பொருத்தமானவற்றை இடைவெளியில் எழுதுக.



(4 புள்ளிகள்)

iii. கீழ்வரும் நபர்கள் மூலம் ஆற்றும் கடமைகளை குறிப்பிடுக.

அ. அதிபர்

1. ..... 2. .....

ஆ. வகுப்புத்தலைவர் / தலைவி

1. ..... 2. .....

(4 புள்ளிகள்)

03. i. பாடசாலை மாணவன் / மாணவி என்ற வகையில் உங்களிடம் காணப்படும் பலவீனங்களையும் அதனைக் குறைத்துக் கொள்ள பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் 3ம் தருக.

	பலவீனங்கள்	குறைத்துக் கொள்ள வேண்டிய வழிமுறைகள்
1.		
2.		
3.		

(3 புள்ளிகள்)

ii. திட்டமிட்ட மாணவனிடம் காணப்படும் இலட்சணங்கள் 3 தருக.

1. .....

2. .....

3. .....

(3 புள்ளிகள்)

iii. பாடசாலை இலட்சினைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.

1. .....

2. .....

(2 புள்ளிகள்)

iv. பாடசாலையின் மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகள் 3 தருக.

1. .....

2. .....

3. .....

(3 புள்ளிகள்)

04. i. இயற்கை வளமான சூரிய ஒளியினால் கிடைக்கும் பயன்கள் 2 தருக.

1. .....
2. .....

(2 புள்ளிகள்)

ii. பௌதீக வளங்களைப் பாதுகாக்கும் முறைகள் 4 தருக.

1. .....
2. .....
3. .....
4. .....

(4 புள்ளிகள்)

iii. உங்களிடம் காணப்படும் உடல் சார்ந்த ஆற்றல்கள் 3ம் உள்ளம் சார்ந்த ஆற்றல்கள் 2 தருக.
உடல் சார்ந்த ஆற்றல்கள்

1. .....
2. .....
3. .....

(3 புள்ளிகள்)

உளம் சார்ந்த ஆற்றல்கள்

1. .....
2. .....

(2 புள்ளிகள்)

05. i. உமது பிரதேசத்தில் மக்களுக்காக சேவை புரியும் அரச அலுவலர்கள் 3 நபர்களை குறிப்பிட்டு அவர்கள் வழங்கும் சேவைகளை குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....

(6 புள்ளிகள்)

ii. நாட்டில் செயற்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்களைக் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....

(3 புள்ளிகள்)

iii. நகரசபை மூலம் வழங்கப்படும் சேவைகள் 2ஐக் குறிப்பிடுக.

1. .....
2. .....

(2 புள்ளிகள்)

06. i. எமது நாட்டில் உள்ள மாகாணங்கள் எத்தனை எனக் குறிப்பிடுவதுடன் நீங்கள் வசிக்கும் மாகாணத்தையும், மாவட்டத்தையும் குறிப்பிடுக.

1. .....
2. .....
3. .....

(3 புள்ளிகள்)

ii. உங்கள் பிரதேசத்தில் காணப்படுகின்ற பௌதீக வளங்களை வைத்து பின்வருவனவற்றுக்கு விடை எழுதுக.

இயற்கை வளங்கள் .....

செயற்கை வளங்கள் ..... (2 புள்ளிகள்)

iii. உங்கள் பிரதேசத்தில் காணப்படும் வளங்களை 3 அடிப்படையில் பாகுபடுத்தி அட்டவணையை நிரப்புக.

பிரதேசத்தில் உள்ள வளங்கள்	உற்பத்தி பொருட்கள்	செய்யப்படும் தொழில்கள்
உ + ம் களி	செங்கள்	செங்கள் கைத்தொழில்
1.	.....	.....
2.	.....	.....
3.	.....	.....

(6 புள்ளிகள்)

07. பாரதி மகா வித்தியாலயத்தில் தரம் 6 ல் கல்வி பயிலும் அசீம் குறும்புத்தனமான மாணவன். ஏனையவர்களை நோவினை செய்து மகிழ்ச்சியடைவார். கேலி செய்வார். அதேபோல் அடுத்தவர்கள் கஷ்ட்டத்தில் இருக்கும் போது உதவுவார். ஏழை எளிய மாணவர்களுக்கு தேவையானவற்றை வழங்குவார். பாதையில் செல்லும் போது ஒழுக்கமாகச் செல்வார்.

i. அசீம் இடத்தில் காணப்படும் நற்குணங்கள் 2 உம் பலவீனங்கள் 2 வீதம் குறிப்பிடுக.

நற்குணங்கள்

1. .....

2. .....

பலவீனங்கள்

1. .....

2. .....

(4 புள்ளிகள்)

ii. பிரதேச மக்கள் ஒற்றுமையாக இணைந்து செயற்படுகின்ற சந்தர்ப்பங்கள் 4 தருக.

1. .....

2. .....

3. .....

4. .....

(4 புள்ளிகள்)

iii. வீதி விபத்தினை தடுப்பது சாரதிகளின் பொறுப்பாகும் வீதி விபத்தினை தடுக்கும் செயற்பாடுகள் 3 தருக.

1. .....

2. .....

3. .....

(3 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** குடியியற்கல்வி

Civic விடைப்பத்திரம் - தரம் 6

பகுதி – I

1. தனித்துவத்தை
2. தன்னம்பிக்கை
3. சடங்கு சம்பிரதாயங்கள்
4. 3
5. அவரை
6. √
7. √
8. X
9. X
10. X
11. 3
12. 1
13. 4
14. 1
15. 4
16. C.W.W கன்னங்கரா
17. இலவசக்கல்வி
18. இலவசக் கல்வியின் தந்தை
19. சேனக்கபிபிலே
20. அரசஒசுசல

பகுதி -II

01.

i. பழைய ஆசிரியர், அதிபர், வயோதிபர்கள், பழைய கட்டிடங்கள், சம்பவத்திரட்டு புத்தங்கள்.

ii. பொருத்தமான விடைக்கு புள்ளிகள் வழங்கவும்

iii. கோபப்படல், சுயநலம், பொய்பேசுதல்

iv. விளையாட்டுக்குழு, நலன்புரிக்குழு, ஒழுக்காற்றுக்குழு, முகாமைத்துவகுழு

v. வீடு கட்டுதல், பயிர்ச் செய்கை

vi. ஆற்றல்களை மேலும் வளர்த்தக் கொள்ளல், தொழிலை மேலும் சிறப்பாக நடத்துதல்.

vii. சகோதரத்துவம், இலகுவாக வேலையை முடித்தல், ஒற்றுமை

02.

i. A - பிரதி அதிபர் B – மாணவர்த் தலைவர் / தலைவி C – வகுப்புத்தலைவர;/ தலைவி

ii. 45 பக்கம்

iii. அதிபர் - கல்வி செயற்பாடுகளின் தலைவராகச் செயற்படக் கூடிய அனைத்து செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல்.

மாணவன் - தினந்தோறும் பாடசாலைக்கு சமூகமளித்தல்.
- கல்வியை விருப்பத்துடன் கற்றல்.
- ஆசிரியர்களை மதித்தல்.

03.

i. பொறுமையின்மை, கோபப்படல், பொய்பேசுதல்
தன்னுடைய பலவினங்களை இனங்காணுதல்.
பலவீனங்களை குறைத்துக் கொள்ள திடசங்கட்பம் எடுத்தல்.
தவறுகள் மீண்டும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளல்.

ii. முறையாகச் செயற்படுவர், உளநெருக்கீடு இன்றி செயற்படுவர், நேரத்தை உச்சஅளவில் பயன்படுத்துவார்.

iii. பாடசாலை கடிதத் தலைப்புகள், பாடசாலை சீருடை, பாடசாலை கொடி

iv. நற்பிரசைகளை உருவாக்குதல், எதிர்காலத்துக்குரிய தலைவர்களை சமூகத்துக்கு தலைவர்களை வழங்குதல், சமூகத்துக்கு தகவல்களை வழங்குதல்.

04.

i. வெளிச்சம், சக்தி

ii. வளங்களை பாதுத்தல், வளங்களில் இருந்து உச்ச பயன் பெறல், வளங்கள் வீணாவதைப் மற்றும் வளங்களை பயன்படுத்தல்.

iii. பாட்டு பாடல், நடனம், விளையாட்டு
கற்றல், பொறுமை, ஏனையவருக்கு உதவி செய்தல்.

05.

i. பொலிஸ் அதிகாரி - மக்கள் பாதுகாப்பு,
ஆசிரியர் - பாடங்கள் புகட்டல்
வைத்தியர் - நோயாளிக்கு சிகிச்சை வழங்குதல்.

ii. மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை

iii. மக்களுக்காக தனது சேவையை வழங்குதல்.
நூலகம், மைதானம், மலசலகூடம், பூங்கா ஆகியவற்றை பராமரித்தல்.

06.

i. 9 மாகாணங்கள்

ii. இயற்கைவளம் - காடுகள், மலை, நீர், காற்று
செயற்கை வளம் - கட்டிடம், பாதை, வீடு

iii. காடு, நீர், கனியங்கள்.

07.

i. நற்குணம் - ஏனையவருக்கு உதவுதல், ஒழுக்கமாக பாதையில் செல்லுதல்.
பலவீனம் - கேலி செய்தல், நேரவினை செய்தல்.

ii. வயல்வேலை, வீடு கூரை வேய்தல், திருமண வீடு, மரண வீடு

iii. வாகனத்தினை தினமும் பரீட்சித்தல்.
பாதை சமிக்கைகளை கடைபிடித்தல்
விபத்து ஏற்படக் கூடிய இடங்களை அறிந்திருத்தல்.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank